2004 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-11-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

ஆ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

24. 2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லரை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-9-2004-ஆம் நாளிட்ட 333-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

25. 2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-9-2004-ஆம் நாளிட்ட 334-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

26. 2002-2003-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

27. 2003-2004-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS